பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**06 07 2026 6 30 PM MONDAY**

மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1) கூட்டுறவுத்துறை சார்பில் ஆயுள் காப்பீட்டு நிறுவனம் தொடங்கப்பட உள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு அமித் ஷா அறிவித்துள்ளார்.

2) தேசிய நெடுஞ்சாலைத் திட்டப்பணிகளை குறித்த காலத்திற்குள் நிறைவேற்றுமாறு மத்திய அமைச்சர் திரு நிதின்கட்கரி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

3) கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தின் விரிவாக்கம் குறித்து முதலமைச்சர் திரு விஜய் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

4) அரசு நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய தவெக அரசு தவறிவிட்டதாக திமுக குற்றம் சாட்டியுள்ளது.

5) 19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் சந்திரிகா புஜாரி மற்றும் ஜாய்ஸ்ரீ தேவி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

- - இனி விரிவான செய்திகள் —

<<<<<<<>>>>>>

கூட்டுறவுத்துறை சார்பில் ஆயுள் காப்பீட்டு நிறுவனம் தொடங்கப்பட உள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு அமித் ஷா அறிவித்துள்ளார்.

இன்று புதுதில்லியில் நடைபெற்ற கூட்டுறவு அமைச்சகத்தின் நிறுவன தின நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

கூட்டுறவுத்துறை சார்பில் நடத்தப்படும் பாரத் டாக்ஸியின் வெற்றியையடுத்து, ஆயுள் காப்பீட்டு நிறுவனம் தொடங்கப்பட உள்ளதாக அவர் கூறினார்.

பாரத் டாக்ஸி சிறப்பாக செயல்படுவதாகவும், அடுத்த இரண்டாண்டுகளுக்குள் இது **500** நகரங்களுக்கு விரவுபடுத்தப்பட உள்ளதாகவும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

தேசிய நெடுஞ்சாலைத் திட்டப்பணிகளை குறித்த காலத்திற்குள் நிறைவேற்றுமாறு மத்திய அமைச்சர் திரு நிதின்கட்கரி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இன்று புதுதில்லியில் தேசிய நெடுஞ்சாலை போக்குவரத்து நிர்வாக கழகத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

திட்டங்களை குறித்த காலத்திற்குள் நிறைவேற்றுவது போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த உதவிடும் என்று அவர் தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் சாலை கட்டமைப்பு வசதிகள் முக்கிய பங்கு வகிப்பதாகவும் அவர் கூறினார்.

நாடு முழுவதும் சர்வதேச தரத்திற்கு இணையான சாலை கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு நிதின்கட்கரி தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தின் விரிவாக்கம் குறித்து முதலமைச்சர் திரு விஜய் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

மாமல்லபுரத்தையடுத்து நெம்மேலியில், முதலமைச்சர் இதுகுறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>

வன விலங்குகளால் மனிதர்கள் தாக்கப்படுவதை தடுப்பதற்காக அதிநவீன கருவிகள் பயன்படுத்தப்பட உள்ளதாக மாநில வனத்துறை அமைச்சர் திரு ரஞ்சித் குமார் கூறியுள்ளார்.

இன்று காஞ்சிபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வெளிநாடுகளில் பயன்படுத்தக்கூடிய பாதுகாப்பு மின்வேலிகள் மற்றும் செயற்கைக்கோள் அடிப்படையிலான கேமராக்கள் முதல் முறையாக தமிழகத்தில் பயன்படுத்தப்பட உள்ளதாக கூறினார்.

காட்டுத்தீ ஏற்பட்டால் அதனை தடுப்பதற்காக ட்ரோன் மூலம் நீர் தெளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கில் தவெக அரசு செயல்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு முகமது பர்வேஸ் கூறியுள்ளார்.

இன்று புதுக்கோட்டையில் பொன்னமராவதி — கூடலூர் இடையே சிறப்பு பேருந்து வழித்தட நீட்டிப்பு வசதிகளை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

மாணவர்கள் விடுத்த கோரிக்கையை ஏற்று இந்த போக்குவரத்து வசதி தொடங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

மக்கள் நலனை மட்டுமே கருத்தில்கொண்டு தவெக அரசு செயல்பட்டு வருவதாகவும் திரு முகமது பர்வேஸ் கூறினார்.

<<<<<<<>>>>>>

அரசு நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய தவெக அரசு தவறிவிட்டதாக திமுக குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக, அக்கட்சி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், அரசு உத்தரவுகள் இணையதளத்தில் வெளியிடப்படாமல் உள்ளதை சுட்டிக்காட்டியுள்ளது.

இதுதொடர்பாக நாளிதழில் வெளியான கட்டுரையையும் திமுக பகிர்ந்துள்ளது.

<<<<<<<>>>>>>

மேகதாதுவில் அணை கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்படாது என்று மத்திய அரசு நாடாளுமன்றத்திலேயே தெரிவித்துள்ளதாக பிஜேபி மாநில துணைத்தலைவர் திரு கே பி ராமலிங்கம் கூறியுள்ளார்.

சேலம் மாவட்டம் மகுடஞ்சாவடியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற முயற்சி மேற்கொண்டாலும் அதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என்று மத்திய அரசு கூறியுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேகதாதுவில் அணை கட்டக்கூடாது என்பதில் பிஜேபி உறுதியுடன் உள்ளதாகவும் திரு கே பி ராமலிங்கம் கூறினார்.

<<<<<<<>>>>>>

பயிர் கடன்களை தவெக அரசு முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இப்பிரச்சினையில் விவசாயிகளின் கவலையை போக்கும் வகையில் தவெக அரசு செயல்பட வேண்டும் என்று கோரியுள்ளார்.

<<<<<<<>>>>>>

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் அடுத்த மூன்று தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 39 Sec. )***

இதற்கிடையே, நீலகிரி மாவட்டம் கூடலூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் பெய்துவரும் மழை காரணமாக கடும் குளிர் நிலவுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — சரவணன் — 23 Sec. )***

<<<<<<<>>>>>>

திருவள்ளூர் மாவட்டம் கன்னிகைபேர் கிராமத்தில் செயல்பட்டுவந்த உணவு பதப்படுத்தப்படும் தொழிற்சாலையிலிருந்து அமோனியா வாயு முற்றிலுமாக அகற்றப்பட்டது.

**17** துறைகளை சேர்ந்த அதிகாரிகள் கடந்த மூன்று நாட்களாக நவீன உபகரணங்களை பயன்படுத்தி அமோனியா வாயுவை அகற்றும் பணியில் ஈடுபட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte — தனசேகரன் - 38 Sec. )*

<<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

ராமநாதபுரம் மாவட்டத்தில் பிரதமரின் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், நாட்டுப்படகு மீனவர்களுக்கு மானிய விலையில் இயந்திரங்களை மாநில அமைச்சர் திரு ராஜீவ் இன்று வழங்கினார்.

-------------------

ராணிப்பேட்டை மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் நடவடிக்கை எடுக்குமாறு ஆட்சியர் திருமதி பிரியா அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

-----------------

நாகை மாவட்டம் நாகூர் கடற்கரையில் தூய்மை இந்தியா இயக்கத்தின்கீழ், தூய்மைப்பணிகளை ஆட்சியர் திரு பிரவீன்குமார் இன்று தொடங்கிவைத்தார்.

-----------------

மயிலாடுதுறை மாவட்டத்தில் பள்ளி வாகனங்களின் பாதுகாப்பு குறித்து அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

-----------------

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அரசினர் கலைக்கல்லூரியில் சிங்கப்பெண் அதிரடிப்படை விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

-----------------

தேனி மாவட்டம் மேகமலையில் சட்ட விரோதமாக செயல்பட்டு வந்த தங்கும் விடுதிகளுக்கு உச்சநீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் வருவாய் துறையினர் சீல் வைத்தனர்.

------------------

சென்னை மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி மாலதி ஹெலன் இன்று வழங்கினார்.

--------------

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட மாதவரம் பகுதியில் சூதாட்டத்தில் ஈடுபட்ட ஆறு பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

<<<<<<<>>>>>>

<u>*விளையாட்டுச் செய்திகள்*</u>

**19** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் சந்திரிகா புஜாரி மற்றும் ஜாய்ஸ்ரீ தேவி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

இந்தோனேஷியாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் **51** கிலோ எடைப்பிரிவு முதல் சுற்றில் சந்திரிகா புஜாரி, **5-0** என்ற

புள்ளிக் கணக்கில் மங்கோலியாவின் **Lakham Tsendbaatar**-ஐ வென்றார்.

**54** கிலோ எடைப்பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் ஜாய்ஸ்ரீ தேவி, சீன தைபே-யின் **Chen Ning Hong**-ஐ வென்றார்.

**23** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆடவர் **50** கிலோ எடைப்பிரிவில் விஸ்வநாத் சுரேஷும், மகளிர் **51** கிலோ எடைப்பிரிவில் தனுவும் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

<<<<<<<>>>>>>

புனேயில் நடைபெற்றுவரும் சர்வதேச செஸ் போட்டியின் ஆறாவது சுற்று முடிவில் இந்தியாவின் **Abhijeet Gupta** முதலிடத்தில் உள்ளார்.

---------------------

**21** வயதுக்கு உட்பட்டோருக்கான இந்திய மகளிர் அணிக்கும் - ஸ்காட்லாந்து மகளிர் அணிக்கும் இடையேயான இரண்டாவது ஹாக்கிப் போட்டி இன்று **Edinburgh**—ல் இன்று நடைபெறுகிறது.

<<<<<<<END>>>>>>